5. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களிடையே அமைதியின்மை குறித்து.

MR. CHAIRMAN : I have received notice of an adjournment motion from the hon. Member, Thiru G. Swaminathan, which reads as follows :—

" Presently the agricultural operation is going on in Thanjavur District. In numerous places of the district, especially in East Thanjavur area, the agricultural labourers have started an agitation for more wages than that recommended by the Justice Ganapathiya Pillai Commission three years ago. Thousands of agricultural labourers under the lead of the Marxists are also hampering the operations by preventing employment of outside agricultural labourers. Thus a serious situation has arisen because of which agricultural operations could not be proceeded with peacefully in the district ".

I would like to know from the hon. Member how the matter falls within the scope of the rules governing adjournment motions.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளபடி, தஞ்சை மாவட்டத்தில் ஒரு பதட்ட நிலைமை உருவாகி இருக்கிறது. இதற்குக் காரணம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள்தான். நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் பல இடங்களில் கூலி உயர்வு கேட்டும், இன்னும் பல இடங்களில் வெளியூர்களிலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து வேலை செய்யக் கூடாதென்று தடுப்பதாலும் இந்தப் பிரச்னை உருவாகியிருக்கிறது. இது போன்ற ஒரு பிரச்னை பல்லாண்டுகளுக்கு முன், கிட்டத்தட்ட, 4, 5 ஆண்டுகளுக்கு முன் தஞ்சையில் உருவாகியது. தஞ்சை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 5 லட்சத்திலிருந்து 6 லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இம் மாதிரி பிரச்னை கீழ்த் தஞ்சையில் எப்பொழுதும் உருவாவது வழக்கம். கீழ்த் தஞ்சையைப் பொறுத்த வரையில், கிட்டத்தட்ட 3 லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்தப் பதட்ட நிலைமை காரணமாக 3 ஆண்டுகட்கு முன், முன்னாள் நீதிபதி கணபதியா பிள்ளை தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு அறிவுறுத்தியபடி இன்னின்ன மாதிரி வேலைக்கு இவ்வளவு ஊதியம் அளிக்கப்பட வேண்டுமென்று நிர்ணயம் செய்தார்கள்.

1972 ஆகஸ்டு 9] [திரு. ஜி. சுவாமிநாதன்]

அந்தக் குழுவின் பரிந்துரைகளை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் பரிசிலனை செய்ய வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. இப்பொழுது மறுபடியும் பரிசிலனை செய்து இந்தக் கூலியை உயர்த்த வேண்டுமென்று கீழ்த் தஞ்சை விவசாயத் தொழிலாளர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நிலைமை என்னவென்றால் தஞ்சையிலுள்ள நிலச்சுவான்தார்களில் 90 சதவிகிதத்தினர் 5 ஏக்கருக்கும் உள்ளாக நிலம் வைத்திருப்பவர்கள். கணபதியாபிள்ளை கமிஷன் அறிக்கையில், இரு போக நிலமாக இருந்தால் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 511-ம், ஒருபோக நிலமாக இருந்தால் ரூ. 303-ம் கிடைக்குமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலுள்ள நிலத்தில் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் இருபோக நிலமாகவும் எஞ்சியது ஒருபோகமாகவும் உள்ளது. எனவே, தஞ்சை மாவட்டத்திலுள்ள நிலச்சுவான்தார்களில் 90 சதவிகிதத்தினர் ஒன்றிலிருந்து 5 ஏக்கருக்குள்ளாக நிலம் வைத்திருக்கும் நிலைமையில் அவர்களது வருமானம், இரு போகம் நிலம் உள்ளவர்களுக்கு மாதம் ரூ. 45-லிருந்து ரூ. 215 ஆகவும், ஒரு போக நிலம் உள்ளவர்களுக்கு மாதம் ரூ. 25-லிருந்து ரூ.125 ஆகவும் உள்ளது. நாட்டுடமை ஆக்கப்பட்ட வங்கிகளிலுள்ள நான்காம் தர சிப்பந்திகளுக்குக் கூட ரூபாய் 230 மாத ஊதியமாகக் கிடைப்பதைக் காண்கிற பொழுது, தஞ்சையிலுள்ள 90 சதவிகித நிலச்சுவான்தார்களுடைய நிலைமை பரிதாபத்திற் குரியது. விவசாயத் தொழிலாளர்களைப் பொருத்து அவர்களுக்கும் மாதம் ரூ. 75 தான் வருமானம் என்ற நிலைமை உள்ளது. ஆண்டுக்கு ஆண்டு வாழ்க்கைச் செலவும், விவசாயச் செலவும் அதிகமாகிக் கொண்டு வரும் நிலையில் தங்களால் கூலி உயர்வு கொடுக்க முடியாதென்று அங்குள்ள சிறு நிலச்சுவான்தார்கள் வாதாடி வருகிறார்கள். விலைவாசி ஏற்றததின் காரணமாக கூலி உயர்வு வேண்டுமென்று தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை முற்ற விட்டுக்கொண்டு போனால், அது ஒரு சங்கடமான நிலைமையை விரைவில் உருவாக்கக்கூடும். நமது நாட்டிற்கு உணவுப் பொருள் உற்பத்தி அத்தியாவசியமான தேவையாக இருக்கின்ற நிலைமையில் தஞ்சையில் இது போன்ற ஒரு மனப்பான்மையை நீடிக்கச் செய்வது நல்லதல்ல. இதற்கான மாற்று நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுத்தாக வேண்டும். குறிப்பாக, விவசாயத் தொழிலாளர்களுக்கு இன்றைய தினம் தஞ்சை மாவட்டத்தில் ஏழு மாதங்களுக்குத்தான் வேலை இருக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில், வேலையில்லாத ஐந்து மாதங்களுக்கும் தேவையான ஊதியத்தை வேலை செய்யக்கூடிய மாதங்களில் சேர்த்துக் கொடுக்குமாறு நிலச்சுவான்தார்களைக் கேட்கிறார்கள். நினைத்தாலும் கொடுக்க முடியாத வறுமை நிலைமையில் நிலச்சுவான்தார்கள் உள்ளார்கள்

என்பதை மனத்திற்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று அரசிற்கு அறிவுறுத்துகிறேன். இப்பிரச்சினையைப்பற்றி விரிவாக ஆராய நமது மன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்றேன்.

Mr. CHAIRMAN : I would like to know the viewpoint of the Government.

*மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்கள் கூலிப் பிரச்னைபற்றி அண்மைக் காலத்தில் வலது சாரி கம்யூனிஸ்ட், இடதுசாரி கம்யூனிஸ்ட், சாவ கட்சி சார்பிலும் தஞ்சை மாவட்டத்தில் நடத்தப்படுகிற சில நிகழ்ச்சிப்பற்றிய ஒத்திவைப்புப் பிரேரணை பற்றிப் பேசுகிற பொழுது, மிக அழகாக இந்தப் பிரச்னையின் தத்துவங்களைச் சொல்லி விவசாயிகளுக்குக் கூலி என்ற முறையில் என்னென்ன கஷ்டம் இருக்கிறது, நிலச் சொந்தக்காரர்கள், பெரும் நிலச்சுவான்தாரர்கள் என்ற அடிப்படையில் இல்லாமல் சாதாரண விவசாயிகளும் நிலத்திற்குச் சொந்தக் காரர்களாக இருப்பவர்களும் என்னென்ன கஷ்டப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெளிவாக விளக்கி விட்டார்கள். அவர்கள் அணுகியது போல, இதை ஒரு பொருளாதாரப் பிரச்னை என்ற கண்ணோட்டத்துடன் பார்த்து, அந்த நிலச்சுவான்தாரர்கள் எந்த அளவுக்குக் கொடுக்க முடியும் என்று செயல்பட்டால், இந்தப் பிரச்னை சுலபமாகத் தீர்க்கப்படும் என்று அரசாங்கம் கருதுகிறது. அந்த நம்பிக்கையில்தான் திரு கணபதியா பிள்ளை தலைமையில் போட்ட கமிஷனின் சிபார்சுகளைச் சட்ட பூர்வமாக நிறைவேற்ற வேண்டும், அந்தச் சட்டத்தின் காலம் முடிந்தவுடன் மறுபடியும் நீடிக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்துடன் அவசரச் சட்டத்தை நம் அரசாங்கம் இப்பொழுது பிறப்பித்திருக்கிறது. அதையொட்டி இந்த மன்றத்திலும் ஒரு சட்டம் வரவிருக்கிறது. அந்தச் சட்டம் வரும்பொழுது, கூலி உயர்வு, பொருளாதார அடிப்படையிலுள்ள பிரச்னை என்பதை நாம் அறிய முடியும் என்று அரசாங்கம் கருதுகிறது. ஆனால், இப்போது இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில், போராட்டம், மறியல் என்ற முறையில் சில போராட்டங்கள் நடந்து வருவது உண்மை. அதற்காக, இது வரை 499 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும் பொழுது, மக்கள் பிரதிநிதிகள் எந்த மாறுதல் வேண்டுமென்றாலும் அதைச் செய்ய வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தால், இந்தப் போராட்டம் தேவையில்லை என்றுதான் அரசாங்கம் கருதுகிறது. நிச்சயமாக அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கவனத்தில் கொண்டு இதை

1972 ஆகஸ்டு 9] [திரு. செ. மாதவன்]

நிறுத்தி விடுவார்கள் என்று கருதுகிறேன். அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் சட்டம், ஒழுங்குப்பிரச்னை வந்தால், அதை எப்படிப் பாதுகாக்க வேண்டுமோ அப்படிப் பாதுகாக்க நம் அலுவலர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று அரசாங்கத்தின் சார்பில் உறுதி கூறிக்கொள்கிறேன். அப்படி நடவடிக்கை எடுக்கும்போது "ஐயையோ, நடவடிக்கை எடுக்கிறார்களே" என்று இந்தப் பிரச்னையை பேசுபவர்கள் அதையும் பேசாமல் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புத் தருவார்கள் என்றும் அரசாங்கம் நம்புகிறது. இந்தப் பிரச்னையைப் பொறுத்த அளவில், இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை என்ற என் கருத்தை அரசாங்கத்தின் சார்பில் சொல்லிக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: In view of the statement made by the Hon. the Minister for Industries and since the matter sought to be discussed involves nothing more than the ordinary administration of law, I withhold my consent for raising the matter.

6. துணைத் தலைவர்கள் குழுப் பட்டியல்

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: இந்திய அரசியலமைப்பின்படி, சட்ட மன்ற மேலவையின் நாற்பத்திரண்டாவது கூட்டத் தொடருக்கான மேலவைத் துணைத் தலைவர்கள் பட்டியலின் உறுப்பினர்களாக கீழ்க்காணும் சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின்கீழ் நான் நியமித்துள்ளேன் என அறிவிக்கிறேன்:—

1. திரு. ஏ. பி. ஜனார்த்தனம்.
2. திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு.
3. திரு. ஜி. சுவாமிநாதன்.
4. திரு. எம். ஆறுமுகசாமி.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(2) ஆகஸ்டு 14-ம் தேதி நடுநிசிக் கூட்டம் குறித்து.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, இடையில் 14-ம் தேதி அன்று இரு சபை உறுப்பினர்களுடைய கூட்டுக் கூட்டம் நடைபெறும் என்று பத்திரிகையில் படித்தோம். அதுபற்றி இதுவரை உறுப்பினர்களுக்கு அறிவிக்க